06.06.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.(ஒ.எஸ்.எண். 75/2020 )திரு.சுடலைமுத்து.

3,8,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

எனக்கு என்ன வயது என்றால் 73 வயதாகிறது. நான் பிறந்தது முதல் இனாம் இராமநாதபுரம் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் இடம் பிரச்சனை உள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மாணிக்கம் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மாணிக்கம் என்பவர் எங்கள் ஊரில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். மாணிக்கம் எந்த வருடம் இறந்து போனார் என்றால் 5 வருடங்கள் இருக்கும். வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் மாணிக்கம் உயிருடன் இல்லை என்றால் சரிதான். மாணிக்கத்திற்கு யார் யார் வாரீசுகள் என்றால் 4 பேர்கள். கணேசன்,சண்முகராஜ்,மீதமுள்ள நபர்கள் பெயர் தெரியாது மொத்தம் 4 பேர்கள். படிக்கத்தெரியுமா என்றால் படிக்கத்தெரியும். பிராதில் கண்டுள்ள 3 முதல் 13 பிரதிவாதிகள் அவர்கள் யார் யார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அய்யம்பெருமாள் செட்டியாருக்கு எத்தனைபேர்கள் என்றால் 2 பேர்கள்.சுப்பையா செட்டியார் எனது அப்பா ஆவார், ஆவுடையப்ப செட்டியார் எனது சித்தப்பா ஆவார். இறந்துபோன சுப்பையா செட்டியாருக்கு யார் யார் வாரீசுகள் என்றால் முருகன், சண்முகவேல்,கணபதி, வாதி சுடலை முத்து ஆகியோர்கள் வாரீசுகள். சுப்பையா செட்டியாரும்,ஆவுடையப்ப செட்டியாரும் உயிருடன் இருக்கும் காலத்தில் பாகம்பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சுப்பையா செட்டியாருக்கு பெண் மக்கள் இருக்கிறார்களா என்றால் 2 பேர்கள் உண்டு. நாகம்மாள்,ஆறுமுகம் ஆகிய 2 பேர்கள். எங்களுக்குடையே 6 நபர்களுக்கு இடையே பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால்

பிரித்துக்கொண்டோம். பாகம் பிரித்துக்கொண்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மாணிக்கம் என்பவரின் மகன் கணேசனை தெரியுமா என்றால் தெரியும். கணேசன் இறந்துவிட்டார். கணேசன் வாரீசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவரின் மனைவி, குழந்தைகளை சேர்த்துள்ளேன்.ஆவடையப்ப செட்டியாருக்கு யார் யார் வாரீசுகள் என்றால் சின்னம்மாள்,முத்து,கருப்பசாமி,மாரியம்மாள் ஆகியோர்கள் வாரீசுகள். ஆவடையப்பன் பாகத்திற்கு கிடைத்த சொத்தை தான் சின்னம்மாள் என்பவருக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் நகைக்கு பதிலாக கொடுத்துள்ளார். அந்த சொத்தை தான் வள்ளிநாயகம்,, சுடலைமுத்து என்பவர்கள் மாணிக்கத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். கிரையம் கொடுத்த சுடலைமுத்து என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்துபோன சுடலைமுத்துவின் வாரீசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சுப்பையா செட்டியாரின் இறப்பு சான்றிதழ் என் கைவசம் உள்ளது. அவரின் வாரீசு சான்றிதழ் வைத்துள்ளேனா என்றால் கைவசம் உள்ளது. வழக்கு சொத்தை தற்சமயம் மாணிக்கம் வகையறா அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் அனுபவித்து வருவதை காட்டக்கூடிய தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆண்டு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் 2011 ஆம் ஆண்டு. இந்த வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2020 ல் தாக்கல்செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்வதற்குமுன்பு வரை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் தவறு நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். மாணிக்கம் உள்ளூரில் தான் குடியிருந்து வந்தார் என்றாலும்

அவர் தான் தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2020 ல் தெரியவந்தது. எவ்வாறு கிரையம் கொடுத்த விவரம் தெரியவந்தது என்றால் வில்லங்கம் போட்டுப்பார்த்ததில் தெரியவந்தது. வில்லங்கம் போட்டுப்போட்டு பார்த்ததற்கு அதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் எனக்கு சொத்து உள்ளது என்றால் தவறு ரோடு உள்ளது. தாவாச்சொத்திற்கு தெற்கும்,வடக்கும் எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.268.அதற்கு பட்டா உண்டா என்றால் உண்டு. தபசில் சொத்திற்கு தெற்கேயும்,வடக்கேயும் எனக்கு இடம் உள்ளதால் சுடலைமுத்து என்ற பெயரை பயன்படுத்தி பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்கவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்த வள்ளிநாயகம்,சுடலைமுத்து என்பவர்களும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். சுடலைமுத்து இறந்து போனதால் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் 3 முதல் 13 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 10ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில்உறை தாக்கல் செய்துள்ளதை படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை.அதில் உள்ள விவரங்கள் தெரியாது என்றால் தெரியாது. எனது வழக்கு குறைபாடுடைய வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2011லிருந்து மாணிக்கம் தான் தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் அவர் இறந்த

பின்னர் வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மாணிக்கத்தில் வாரீசு 7 பிரதிவாதி வெளிநாட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல சென்னையில் இருந்து வருகிறார்.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
06.06.2024.